பக்கங்கள்: ஆறு

STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

PERSONAL CLASSES
B.M.C: FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

PHY: சத்தியசீலன்
CHE: மதுரமணி
BOT: சர்வானந்தா
ZOO: சண்முகதாசன்
PURE: } விஜயகுமார்
APP. }

உதயன்

விலை
ரூ2/50

A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89

மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்:

PERSONAL CLASSES
B. M: C FRONT LANE,
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஞூ ஆடி மீ 24உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 5 (08 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 211

இந்திய யோசனைகள் இன்று நாடாளுமன்றில்

வெள்ளியன்று நடைபெறவிருக்கும் விசேட அமைச்சரவையில் இறுதி முடிவு

கொழும்பு, ஆகஸ்ட் 8

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் சம்பந்தமாக புதுடில்லிப் பேச்சுக்களின் போது இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அங்கு எதிர்க்கட்சி எம். பிக்களின் கருத்து அறியப்படும். அதன் பின் வெள்ளி இரவு 7 மணிக்கு நடைபெறும் விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே, இந்தியாவின் யோசனைகள் குறித்து இலங்கை எந்த நிலைப்பாட்டை மேற்கொள்வது என்பது குறித்து ஜனாதிபதி இறுதி முடிவு எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய யோசனைகள் குறித்து ஆராயப்படுவதற்காக நேற்று விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

எதிர்பார்க்கப்பட்டது போல நேற்றைய கூட்டத்தில் திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்று காலை அரசாங்க நாடாளுமன்றக் குழு கூடுகிறது பிற்பகலில் நாடாளுமன்றம் கூடுகிறது இரண்டு கூட்டங்களிலும் இந்திய யோசனைகள் குறித்து ஆராயப்படும்

இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவும் கூடுகிறது. அங்கும் விரிவாக ஆராயப்பட்டு ஆளுங்கட்சிப் பிரமுகர்களின் கருத்து அறியப்படும்.

இதேவேளை எதிர்க்கட்சிப் பிரமுகர்களுடன் ஜனாதிபதி கலந்தாலோசனை நடத்துவார்.

அதன் பின்னர் வெள்ளிக்கிழமை இதற்கென நடைபெறும் விசேட அமைச்சர

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



வாத்திமார் பக்கம் பார்வை பட்டிருக்குது எண்டு சொல்லுங்கோ ......!

சுபநேரம்

08 — 08 — 1989
ஆடி 24 — செவ்வாய்க்கிழமை
நக்ஷத்திரம்: சித்திரை
சுபநேரம்:
10-34 முதல் 12-04 வரை
ராகுகாலம்:
3-04 முதல் 04-34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

நவிண்டில்முகாம் மூடப்பட்டது

பருத்தித்துறை, ஆக. 8

நவிண்டில் இந்திய அமைதிப்படையினரின் முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது.

அப் பகுதியில் அமைக்கப்பட்ட சென்றிகள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. வீடுவாசல்களை விட்டுச்சென்ற மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்கு வந்து குடியேறுகின்றார்கள். (ஒ 118-70)

ஆசிரியர்களுக்கு இலவச கண்சிகிச்சை, கண்ணாடி!

கொழும்பு ஆகஸ்ட் 8

ஆசிரியர்களுக்குக் கண்பரிசோதனையை இலவசமாக செய்து அவர்களுக்கு சலுகை விலையில் மூக்குக் கண்ணாடிகளை வழங்க, கல்வி அமைச்சில் அதற்கென அமைக்கப்பட்டுள்ள விசேட பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கண் நிபுணர்களும் மற்றும் அதிகாரிகளும் கல்வி மாவட்டங்களுக்குச் சென்று குறிப்பிட்ட இடங்களில் கண்பரிசோதனைகளை நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

தெற்கில் ஹர்த்தால்

நேற்று மாத்தறை, கேகாலை, அம்பலாந்தோட்டை ஆகிய பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அண்மையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதை கண்டித்தே அப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதே வேளையில் கண்டி, கொழும்பு ஆகிய பகுதியில் நேற்று வழமை நிலை காணப்பட்டது. (உ-21)

24 மணித்தியாலத்தில் 30பேர்பலி

கொழும்பு ஆக 8

மொனறாகலையில் ஏ. எஸ் சிவலிங்கம் என்பவர் இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டார்.

★ கம்பஹாவில் கிரிந்திவத்தையில் 20 கிலோ எடையான நிலக்கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

★ தென்னக்கும்புற பகுதியில் அரசுக்குச் சொந்தமான 4 பஜேரா ஜீப் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தென்பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் 25 முதல் 30 பேர்வரையானோர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்டியில் 7 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தங்காலையில் எரிந்த நிலையில் வள்ளம் ஒன்று கரை ஒதுங்கியது அதில் 10 பேரின் சடலங்கள் கிடக்க காணப்பட்டன.

தங்காலையில் நடந்த மற்றொரு சூட்டுச்சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் அவரது மனைவியும் கொல்லப்பட்டனர்.

மீரிகமவில் அடையாளம் தெரியாத நிலையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தமக்குள் மோதிக் கொண்டதில் 2 பொலிஸார் காயமடைந்தனர். (உ - 21)

கொழும்பு ரயில் காங்கேசன் வரை!

20 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம், ஆக. 8

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெறும் வார இறுதி பயணிகள் ரயில் சேவை எதிர்வரும் 19 அல்லது 20ஆம் திகதி முதல் சுன்னாகம் வரை நீடிக்கப்படும்.

இதே வேளை இந்தச் சேவையை அடுத்த மாதம் முதல் காங்கேசன்துறை வரை நீடிக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வரையான ரயில் பாதையை செப்பனிட்ட பின்னர் கொழும்பு-காங்கேசன் பயணிகள் ரயில் சேவையை தினமும் நடத்த முயற்சி எடுக்கப்படும் என ரயில்வே திணைக்கள வட்டா

(6ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை வழமைக்குத் திரும்புகிறது

பருத்தித்துறை, ஆக. 8

பருத்தித்துறை நகரம் வழமைக்குத் திரும்பிவருகிறது. நேற்றுக் காலைமுதல் பருத்தித்துறை போக்குவரத்துச் சபையின் சகல பஸ்களும் சேவையாற்றுகின்றன.

பருத்தித்துறை – கொழும்பு பஸ் சேவையும் ஆரம்பமாகியுள்ளது என அறிவிக்கப்பட்டது. (ஒ-118)

4 ஈழத் தமிழ் கைதிகள் ஓடும் ரயிலில் தப்பினர்!

தமிழகத்தில் சம்பவம்

திருச்சி, ஆக. 8

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் ஓடும் ரயிலில் இருந்து குதித்துத் தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு அதிகாலை அரியலூர் அருகில் மருதையூர் பாலத்தை பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயில் கடந்து சென்றுகொண்டிருந்த சமயம் இடம்பெற்றது.

செங்கை அண்ணா மாவட்டத்தில் வலசரவாக்கம், பழவந்தாங்கல், மடிப்பாக்கம் பகுதிகளில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக ரமேஷ் என்று அழைக்கப்படும் கலைஞானவேலு, மைக்கல் மற்றும் கந்தர் என்றழைக்கப்படும் சித்தப்பா, ராஜா என்று அழைக்கப்படும் இருதயராஜ், வியாகு என்றழைக்கப்படும்

(6ஆம் பக்கம் பார்க்க)

●இவர்களின் இராஜினாமா ஏற்கப்படாதாம்!

கொழும்பு, ஆக. 8

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் ராஜினாமாக் கடிதங்களை ஏற்பதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

ரூபவாஹினி, ஐ. ரி. என். தொலைக்காட்சி, இலங்கை வானொலி, லேக்ஹவுஸ் பத்திரிகை ஸ்தாபனம் ஆகியன தற்போது பாதுகாப்புப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. (ஒ-எ)

பிறப்புச் சான்றிதழ் வழங்க அத்தாட்சிப் பத்திரம் இல்லை

யாழ் ஆஸ்பத்திரியில் பிறந்த அறுநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இது வரை வழங்கப்படவில்லை.

மேற்படி சான்றிதழ்களை எழுதி வழங்குவதற்கு யாழ் ஆஸ்பத்திரி பிறப்பு - இறப்பு பதிவாளர் பிரிவில் அத்தாட்சிப் பத்திரப் புத்தகங்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் செயலகத்திலுள்ள ஆஸ்பத்திரியின் பிறப்பு - இறப்பு பதிவாளர் பிரிவுக்கு புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் —

இதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது. (உ-10)

யாழ் ஆஸ்பத்திரியில் விசர்நாய்க்கடி ஊசி இல்லை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 8

யாழ் ஆஸ்பத்திரியில் விசர்நாய்க் கடிக்கு போடுவதற்கான ஊசிமருந்து கடந்த ரு வாரத்துக்கு மேலாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஊசி போடுவதற்காக தினமும் ஆஸ்பத்திரிக்கு வரும் சுமார் ஐம்பது நோயாளிகள் இதனால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லுகின்றனர்.

கொழும்பு மருத்துவ ஆய்வு நிறுவனத்தில் போதியளவு ஊசிமருந்து கையிருப்பில் இல்லாததன் காரணமாகவே இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, சாவகச்சேரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் விசர்நாய்க்கடி வைத்தியத்துக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கே வரவேண்டிய சூழ்நிலை நிலவுவதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஊசிகளை உடனடியாக கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் முயற்சி எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. (உ-9-10)

ஆசிரியர் பதவி விண்ணப்பம்; இன்று கடைசி நாளாகும்

யாழ்ப்பாணம், ஆக. 8

25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசி தினம் இன்றாகும்.

யாழ்: கல்வித் திணைக்களத்தில் இன்று பிற்பகல்4:30மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தபால் மூலம் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-9)

வல்வை அசம்பாவிதங்கள்

நாடாளுமன்றத்தில் இன்று பிரஸ்தாபிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 8

வல்வெட்டித்துறையில் கடந்த வாரம் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணி இன்று (செவ்வாய்க்கிழமை) பிரஸ்தாபிக்க இருப்பதாக அறியவருகிறது.

முன்னணியின் எம் பிக்கள் வல்வையில் நடைபெற்ற சம்பவங்களை விரிவாக எடுத்துக் கூறுவர். என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழவர் ஜனநாயகமுன்னணி எம். பியான திரு. பி. கணபதிப்பிள்ளை வல்வெட்டித்துறைக்கு நேரில் சென்று அங்கு நடந்தவற்றை கேட்டு அறிந்து கொண்டார் என்பது தெரிந்ததே. (ஓ-9)

மட்டக்களப்பில்

தொண்டர் ஆசிரியர் சுழற்சிமுறை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்: ஆக 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

24 மணிக்கு 10 பேர்என்ற அடிப்படையில் சுழற்சிமுறையில் இந்த உண்ணாவிரதம் தொடர்ந்து நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

விரைவில் நடைபெறவிருக்கும் பயிலுநர் ஆசிரியர் தெரிவில் தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு வயதெல்லை இருக்கக்கூடாது, என்றும் கோரியே அவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி சிலைக்கு அருகில் உண்ணாவிரதம் நடந்துவருகிறது. (அ-21)

வடமராட்சியில் நேற்றும் மோதல்கள்!

யாழ்ப்பாணம், ஆக. 8

பருத்தித்துறைப் பகுதியிலும், நெல்லியடிப் பகுதியிலும் நேற்றும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

பருத்தித்துறையில் பகல் 12 மணியளவிலும், நெல்லியடியில் பிற்பகல் 3 மணியளவிலும் மோதல்கள் இடம்பெற்றன.

மோதல்களைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் வீச்சுக்களும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ஓ-9)

நிறுவுனர் நினைவு நாள்

நல்மனதுடையோரின் நல்ல எண்ணங்கள் எப்போதும்வீண் போவதில்லை. அவர்களது நோக்கங்களும் இலட்சியங்களும் எப்படியும் நிறைவேறியே தீருவதுண்டு.

அமரர் சண்முகம்

அவ்வாறே "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கோட்பாட்டை தனது வாழ்க்கை நெறியாக்கிக் கொண்ட அமரர் கணபதிப்பிள்ளை சண்முகம் அவர்களின் இலட்சியங்களும் நிறைவேறின.

அமரர் சண்முகம் அவர்கள் பயன் கருதாது மற்றவர்களுக்குப் பணி செய்தவர். ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் இறுதி வரை இறுகப் பற்றி வாழ்ந்தவர். எளிமையான இயல்பினர். தெய்வ நம்பிக்கையும், சமய சிந்தனையும் இம்மியும் மறவாதவர். வீட்டு நலனைப் போலவே நாட்டு நலனிலும் அக்கறை கொண்டவர்.

இனிமையான பேச்சு. செருக்கில்லாத குணம். எல்லோரையும் அன்புடன் அரவணைத்து நடத்தும் சிறப்பியல்பு. நீதிக்கும் நியாயத்துக்கும் கட்டுப்படும் பெருந்தன்மை. இத்தனையும் அடங்கியவர் அமரர் சண்முகம் அவர்கள்.

செல்வம் ஒருவரிடம் தேங்கிக்கிடக்கவேண்டிய ஒன்றன்று என்று மனதார உணர்ந்தவர். அதனால் ஆதரவற்றவர்களுக்கு, தம்மை அண்டியவர்களுக்கு உதவியவர். பலருக்கு உயர்கல்வி, தொழில் வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தவர்.

தமிழ்ப் பிரதேசங்களின் வர்த்தக விவசாய, கைத்தொழில் வளர்ச்சிக்கு தேவையான நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக "ஷப்ரு" நிதிநிறுவனத்தை அவர் ஸ்தாபித்தார்.

அவரது பரந்த நோக்குடைய பொருளாதாரப் பார்வையின் விளைவுகளில் ஒன்றே 'உதயன் — சஞ்சீவி' நிறுவனமாகும். அதன் நிறுவுனரும் அவரே.

தமிழ்ப் பண்பாட்டிலும், சைவநெறியிலும் ஊறியவரான அமரர் சண்முகத்தின் கடின உழைப்பும், தெளிந்த சிந்தையும், ஒழுங்கு சீரமைந்த செயற்பாடும், நெறி பேணும் வாழ்க்கையும் அவரது புகழை என்றும் எடுத்துச் சொல்லும்.

அவரது சமூக, சமயப் பணிகள் அவரது பெயரை மக்கள் மனதில் நிலைக்கச் செய்து விட்டன. 'ஷப்ருவும்' உதயன் நிறுவனமும் அவரது பெயரை தமிழ்ப் பெருங்குடி மக்களின் நெஞ்சங்களில் முத்திரைகளாய் பதித்து வைக்கும் என்பது நிச்சயம்.

இன்று அமரர் சண்முகம் அவர்களின் நான்காவது ஆண்டுத் திதியாகும்.

அவரது ஆத்மா இறைவன் கழல் சேர்ந்திருந்து எல்லோரையும் ஆசீர்வதித்து, நல்வழிப்படுத்தி, வளம் சேர்க்க இறைஞ்சுவோமாக. ★

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரம்

தேவை

இறைண்டிங் மில்வேலைதங்கி பிருந்து செய்வதற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. வசதிகள் அனைத்தும் செய்துகொடுக்கப்படும். பின்வரும் இறைண்டிங் மில், மானிப்பாய் றோட், தாவடியுடன் தொடர்புகொள்ளவும்.

(11710)

விற்பனைக்கு

Brand New C-90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சந்திரன் மோட்டார் சைக்கிள் கராஜ், வீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(11777)

இறைச்சிக்கோழி விற்பனை

Breilers எல்லா வகையான கோழி இறைச்சி எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தி.

[11778]

மடு யாத்திரை

மடுத்திருப்பதிக்கு யாத்திரை போவதற்கு புனித சிந்தாத்திரை மாதா நிர்வாகிகளால் பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகல வசதிகளும் செய்து தரப்படும். தொடர்பு: புனிதசிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், கரம்பொன், ஊர்காவற்றுறை.

(11779)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை

நடைபெறவுள்ள ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான பொது அறிவும், பொது உளச்சார்பு வகுப்புகள் எதிர்வரும் 1989 - 08 - 09 புதன்கிழமை மு.ப: 9 மணிக்கு ஆரம்பமாகிறது. குறைந்த கட்டணம் 50.00ரூபா. தினமும் 3 மணித்தியால வகுப்புக்கள்.

தொடர்பு: அன்பு கல்வி நிறுவனம், மே/பா. உயர் கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(11768)

திருமண சேவை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத்திருமணங்களை விடாமுயற்சியால் நிறைவேற்றி வைப்பவர்கள் நாமே! உங்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ முற்றுந் தகுந்த மணமகன் மணமகளைத் தேடி அலையாது நாட வேண்டிய இடம்: புதிய மாங்கல்யா மல்ரீ சேவிஸ், 14 விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை மேற்கு, திருவிளங்கம்.

(1367)

கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (09 - 08 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 09, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு: இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை.

(1349)

கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1053)

சந்தையில் விலையேற்றம்

முல்லைத்தீவில் அரிசி, மரக்கறி, மீன் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்து உள்ளன:

உற்பத்தியாளரிடம் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் ஒன்றுகூடி விலைகளைக்கூட்டி உடனடியாக இரண்டுமடங்கு லாபம் பெறுகின்றனர்.

இதனால்பாவனையாளர்களே பாதிக்கப்படுகின்றனர்

மீன் வியாபாரிகளும் இதே பாணியில் லாபமடைகின்றனர். (க-92)

COMPUTER COURSES

Diploma in Basic Programming

புதிய பிரிவுகள் 12-8-89 ஆரம்பம்

MODULE - I — 8. 30 A. m
MODULE - II — 10. 00 A, m

சேரும்போது செலுத்த வேண்டியது: Rs 500/-

★ ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட பிரிவிற்குரிய மாணவர்கள் அனைவரும் தத்தமக்குரிய பிரிவுகளில் உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ மல்லாகம் கிளையில் 11-8-89, 4:30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகும். ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மல்லாகம் IDP காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

IDP COMPUTER CENTRE
342, K. K. S Road, JAFFNA.

(C/3165)

சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனி (Germany)க்குப் பிரயாணம் செய்ய விரும்புவோர் (16 வயதிற்கு உட்பட்டவர்களும் மேற்பட்டவர்களும்) எங்கள் காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பெரியோர்களில் எமது அடுத்த பயண ஒழுங்குக்கு மேலும் 6 பேர்களுக்கு மட்டுமே 15 நாட்களுக்குள் அனுப்பிவைக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்: 16 வயதுத் தோற்றத்தில சிறியோராக இருப்பவர்கள் ஒவ்வொரு கிழமையும் அனுப்பி வைக்கப்படுவர்.

★ சுஜேரா ரவல்ஸ் ★

21, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம்.

(சி/3179)

மின்சாரம் இல்லாததால் கிளிநொச்சி பெரும் பாதிப்பு

இரசாயனக்கூட்டுத்தாபன மின்சாரமும் இம் முறை இல்லை

வட்டக்கச்சி ஆக 8

மின்சாரம் இல்லாததால் கிளிநொச்சி மாவட்டம் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஆஸ்பத்திரியும் இருளில் மூழ்கியுள்ளது.

முன்பு மின்சாரம் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் உள்ள பெரிய ஜெனரேட்டர் மூலம் கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது

ஆனால் இம்முறை அந்த மின்சாரமும் வழங்கப்படாததால் சகல துறைகளிலும் பெரும் பாதிப்பு நிலவுகிறது

கிளிநொச்சி மாவட்டவைத்திய அதிகாரியின் முயற்சியால் மண்ணெண்ணை மூலம் இயங்கும் குளிர்சாதனப்பெட்டி மூலம் மருந்து வகைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன

மருத்துவமனை வார்ட்டுகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. சிறிய லாம்புகள் மூலம் இரவில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நகரில் உள்ளதொழிற்சாலைகள் இயங்காததால் பெரும் எண்ணிக்கையானோர் வேலை இழந்துள்ளனர். (இ-163)

நல்ல திட்டங்களை வழங்கி நாட்டின் நலனுக்கு உதவுகிறது

வங்கி பொன் விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஆக. 8

"இலங்கை வங்கி தனது 50 ஆண்டுகால வரலாற்றில் நல்லபல திட்டங்களை வழங்கி நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கு உதவி வருகிறது. அவற்றில் குறிப்பாக அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்திய கடன் வழங்கும் முகவரை நியமிக்கும் திட்டம், சேமிப்புச் சான்றிதழ் திட்டம், காசின்றியே பண்டங்களை வாங்க உதவும் சிபாங்க் கடன் அட்டைத் திட்டம் என்பவற்றைக் கூறலாம்"

ஊர்காவற்றுறைக் கிளையில் நடைபெற்ற இலங்கை வங்கி பொன்விழா நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கிளை முகாமையாளர் திரு: பி. ஏ. அருமைநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

உ. அ. அதிபர் திரு. எஸ். சிவரத்தினம், வண. பிதா. கிருபானந்தர் அடிகளார், சிவாச்சாரியார் ஜெ சந்திரகாந்தன், பட்டினசபை முன்னாள் தலைவர் திரு. எஸ். இர்மானுவேல், மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். இராஜகோபாலசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

திரு. பி. அஞ்சலோ, இளைப்பாறிய முன்னாள் கிளை முகாமையாளர் திரு: ந நடராசா, இலங்கை வங்கியைச் சேர்ந்த திரு. நாகேந்திரன் ஆகியோரும் பல வாடிக்கையாளரும் உரையாற்றினார்கள். கலந்து கொண்டவர்களுக்கு தேநீர் விருந்துபசாரமும் அளிக்கப்பட்டது. (க)

இறுதிப் பரீட்சை எடுக்காத மாணவருக்குப் பட்டமா?

ராஜினமாச் செய்ய நேரிடும் என்கிறார் சம்மேளனத் தலைவர்

கொழும்பு ஆக. 8

இறுதியாண்டு பரீட்சை எடுக்காத பல்கலைக் கழக மாணவருக்கு பட்டம்வழங்கக்கூடாது என்று பல்கலைக் கழக ஆசிரியர் சங்க சம்மேளனத் தலைவர் பேராசிரியர் ஒஸ்மண்ட் ஜெயரத்தின தெரிவித்தார்.

அப்படி பட்டம் வழங்க பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு தீர்மானிப்பின் நாம் ராஜினமா செய்வது பற்றி ஆலோசிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இறுதிப் பரீட்சை எடுக்காமல் பட்டம் வழங்குவது பல்கலைக் கழகங்களின் தரத்தையே பணயம் வைப்பதாக முடியும்.

ஆனால் இறுதியாண்டு பட்டதாரி மாணவருக்கு தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்குவதை பல்கலைக்கழக ஆசிரியர்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று பேராசிரியர் ஒஸ்மண்ட் ஜெயரத்தின சொன்னார். (ஓ - எ)

பொதுப் பணிக்கு வாழ்வை அர்ப்பணித்த பெரியார்

காலஞ்சென்ற மன்மதராசனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக 8

'சைவபரிபாலன சபையில் நீண்டகால நிருவாகியாகவும் பொருளாளராகவும் அச்சக அதிபராகவும் நற்பணி புரிந்த திரு. மன்மதராசன் எல்லா வகையிலும் பொதுப்பணிக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பெரியார் ஆவார்'.

நாவலர் தரும சொத்துப் பாதுகாப்புச் சபையின் அறங்காவலர் குழுக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அண்மையில் காலஞ்சென்ற திரு. இ. செ. மன்மதராசனுக்கு அஞ்சலி செலுத்தியபோது மேற்கண்டவாறு கூறினர்.

'திரு. மன்மதராசன் நாவலர் தொண்டுப் பணியில் ஈடுபட்டார். சிதம்பரத்திலே நாவலர் அறங்காக்கும் நிகழ்ச்சிகளில் சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் சார்பாக ஆக்க வேலைகளுக்கு ஆலோசனை வழங்கி அவற்றை நடைமுறைப்படுத்த அவர் அரும்பாடுபட்டார் என்று அவர் மேலும் கூறினர். (க)

விண்ணப்பங்கள் இன்றுமாலைவரை

யாழ்ப்பாணம், ஆக.8

யாழ். மாவட்டத்திற்குத் தெரிவு செய்யப்படவுள்ள 1034 பயிலுநர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் குவிந்த வண்ணம் உள்ளன.

விண்ணப்ப முடிவு நாள் இன்றைய தினமாகும்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இன்று மாலை வரை கல்வித் திணைக்களத்தில் நேரில் [illegible]கலாம். (இ-6)

மாந்தீவு ஆஸ்பத்திரித் திருடன்

மட்டக்களப்பு, ஆக. 8

மாந்தீவு குஷ்டரோக வைத்தியசாலையில் திருட்டுக்களில் ஈடுபட்டனர் என்று கருதப்படும் மூவர் மட்டக்களப்பு நகரில் பொதுமக்கள் பார்வைக்கு நிறுத்தப்பட்டனர்.

அண்மையில் இயக்கம் ஒன்றினால் கைது செய்யப்பட்ட இம்மூவரும் மணிக்கூண்டுக் கோபுரத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

ஒவ்வொருவரின் கழுத்திலும் 'மாந்தீவு ஆஸ்பத்திரித் திருடன்' எனச் சுலோகம் எழுதிக் கட்டப்பட்டிருந்தது (இ-21)

வர்த்தகர் கொலை

யாழ்ப்பாணம். ஆக 8

கொழும்பு புறக்கோட்டை 4-ஆம் குறுக்குத்தெருவில் கடந்த வார இறுதியில் மாத்தறை பிரபல வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரிடமிருந்து [illegible] லட்சம் [illegible] கப்பட்டது. (க-21)

சர்வோதய உதவி

பருத்தித்துறை, ஆக 8

வடமராட்சியின் பருத்தித்துறை, மந்திகை, கிராமக்கோட்டடி ஆகிய இடங்களில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களினால் இடம்பெயர்ந்து மணற்காடு, குடத்தனை, பொற்பத்தை ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த சுமார் 300 அகதிகளுக்கு வடமராட்சி சர்வோதய நிலையம் அத்தியாவசியப் பொருள்களை வழங்கியது. (க-118)

மணிக்கூடு திருட்டு

குருநகர், ஆக. 8

குருநகர் காணிக்கை மாதா கோவிலின் சுவர் மணிக்கூடு ஒன்று பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க-51)

ஐ.நா. அபி. திட்டத்தின் கீழ் மகளிர் பயிற்சிக் குழுக்கள்

யாழ்ப்பாணம், ஆக. 8

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இருக்கும் "பனம் பொருள் அபிவிருத்தித் திட்டத்தின் முதற்படியாக பனை அபிவிருத்திச் சபை மகளிர் பயிற்சிக் குழுக்களை கிராமந்தோறும் ஆரம்பிக்க இருக்கின்றது.

இப்பயிற்சிக் குழுக்களை அமைப்பதற்குத் தேவையான தகுதியை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு சில யுவதிகளை தெரிவு செய்து அவர்களுக்கு இந்தியாவிலும், இலங்கையிலும் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

தெரிவு செய்யப்பட உள்ள யுவதிகள் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்தவர்களாக இருக்கவேண்டும்.

பயிற்சிக் காலத்தின்போது அவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் இருந்தே கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது. (க-13)

3ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம்:
1923 - 03 - 16

●●●●

மறைவு:
1986 - 08 - 08

கபிரியற்பிள்ளை ஜெகராஜா

நீங்கள் மறைந்து மூன்று ஆண்டாயினும் உங்களின் நினைவு எம்மை விட்டு என்றும் மறையாது!

உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புலோலி தெற்கு,
புலோலி.

1460)

100ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணில் மலர்வு:-
12-09-1969

மண்ணில் உதிர்வு:-
01-05-1989

அமரர் நி. பரதராஜன் [மொறிஸ்]

எமது அன்புச் செல்வமே பரதா!

நீ நடந்த பாதைகளின் தடங்கள் இன்னும்
காற்றோடும் புழுதியோடும் கதைகள் பேசுகின்றன!
வீட்டுச் சுவர்களும் வீதி மரங்களும்
மைந்தனைக் காணாமல் மௌனமாய் நிற்கின்றன!
கற்களும் முட்களும் இரண்டு பாதங்களை இழந்தோமென்று
இறுகிக் கிடக்கின்றன!
வீதியோர நாய்கள் கூட
குரைப்பதை மறந்து குந்தியிருக்கின்றன!
குழந்தைகள் கூட்டம் குதூகலம் மறந்து
காலரவத்திற்காய் காத்திருக்கின்றன!
மனித இதயங்கள் மன்னவனை இழந்து
மரணித்துக் கிடக்கின்றன
சூரியனே கருகியதென்று ஊர்கள் இன்னும்
இருண்டு கிடக்கின்றன!
என்ன நடந்தது............?
காற்றும் புழுதியும் தொடர்ந்து கேட்கின்றன!

உன்னை நினைந்துருகும் உன் அன்பு:
அம்மா, அப்பா, அக்காமார், அத்தான்மார்,
அண்ணன்மார், அண்ணிமார், தம்பி, தங்கை,
பாட்டா, அப்பாச்சி.

புலோலி மேற்கு.
08-08-1989.

(1461)

பொய்யாமொழி

குறள்:
அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

பொருள்:

பொருள் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்றுப் போனது.

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
08 - 08 - 1989 த: பெ: இல: 23

பழையவரும் புதியவரும்

நாட்டின் இப்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதே சிறந்த வழி. இப்படித் தெரிவித்திருக்கிறார் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

திரு. ஜெயவர்த்தனா இலங்கையின் உயிர்வாழும் மிக மூத்த அரசியல் வாதி. இலங்கை சுதந்திரம் காண வேண்டும் என எல்லோரும் சேர்ந்து ஒரு மனதோடு உழைத்த காலத்தில் இருந்து அரசியலில் ஈடுபட்டு வந்தவர். மதிநுட்பமும், திறமையும், சாணக்கியமும், சமயோசிதமும் உள்ள அரசியல் வாதிகளில் ஒருவராக மதிப்பிடப்பட்டவர். அதே போலத் தந்திரமும, நினைத்ததை நடத்தும் போக்கும் கொண்டவர் எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

அவரது நீண்ட கால அரசியல் வாழ்க்கையின் உச்சக்கட்டமாக, கடந்த பதினொரு வருடங்களாக நாட்டின் அரசாங்கத் தலைவராகப் பதவி வகித்தவர். ஆறு மாதங்களுக்கு முன்னரே அரசியலில் இருந்து ஓய்வு பெற்றவர்.

அவரது ஆட்சிக் காலத்தில், முதல் இரண்டு மூன்று வருடங்கள் தவிர்த்து, மிகுதி எட்டு, ஒன்பது வருடங்களும் பெரும் பிரச்சினைகளும், பயங்கரங்களும் விளைந்த காலம். இலங்கை அரசியலிலேயே பெரும் நெருக்கடிகள் மலிந்த காலம். குறிப்பாக ஈழத் தமிழ் மக்களுக்குச் சோதனைகளும் வேதனைகளும் மிகுந்த காலம். அவர்கள் அழிவுகளையும். இழப்புகளையும் கரையில்லாமல் கண்ட காலம்.

தமிழர்களின் உரிமைப் பிரச்சினை நாட்டின் தேசியப் பிரச்சினைகளில் முதன்மை வாய்ந்ததாக விளங்கிய போதிலும், அதனை நியாயபூர்வமாகத் தீர்ப்பதற்குப் பெரும் தடைக்கல்லாக இருந்தவர், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே என்பது வரலாற்று உண்மை. தமிழர்களின் பரம எதிரிகளான பேரினவாதிகளின் முதன் முழுப் பிரதிநிதியாக விளங்கியவர் அவர்.

தனிச் சிங்களச் சட்டத்துக்கு வித்திட்டவர் அவரே. சட்டசபையில் எல்லோரையும் முந்திக் கொண்டு இன விரோத நஞ்சை விதைத்தவர் அவரே. அதன் பின் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தது முதல் எல்லாக் காலங்களிலும் தமிழர் உரிமைகளுக்குக் குந்தகமாக இருந்தவரும் அவரே.

ஆட்சித் தலைவனாக வந்ததும், ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என்று கர்ச்சித்து தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு இன அழிப்புச் செய்து வெற்றி கண்டவரும் அவரே.

தமிழர் பிரச்சினையும், அவர்கள் அழிவும் நீடிக்கட்டும் என்ற உள் நோக்கத்துடன், குள்ளத் தனத்துடன் செயலாற்றி அதனைத் தீராத் தகராறாக நிலைக்க வைத்து விட்டுச் சென்றவர் திரு. ஜெயவர்த்தனா.

தமிழர் பிரச்சினையால் எழுந்த தேசிய நெருக்கடிகளைச் சமாளிக்கத் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து, அவர் ஆட்சித் தலைவனாக இருந்த போதும் முன் வைக்கப்பட்டது. அப்போது அது குறித்து கரிசனை செலுத்தாது தட்டிக்கழித்தவர், தெரிந்தும் தெரியாதவர் போல அசட்டையாக இருந்தவர் இப்போது தேசிய அரசாங்கம் குறித்துக் குரல் கொடுத்திருக்கிறார்.

தமது தலைமைத்துவக் காலத்தில் பொருந்தாச் சரக்காகக் கருதிய தேசிய அரசாங்கம், இப்போது எப்படிப் பொருந்தும் அல்லது சாத்தியமாகும் என்று நினைத்தாரோ தெரியவில்லை!

ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் சேர்ந்து தேசிய அரசு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். தேசிய நீரோட்டத்தில் சேராதவர்களை, ஜனநாயக அணிக்கு வராதவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அப்படியானால் தேசிய அரசு ஒன்று உருவாகி, இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கருதுகிறாரா? தமிழ் மக்களைக் கொன்றொழித்தது போல சிங்கள மக்களையும அழிக்கச் சொல்லிப புத்தி கூறுகிறாரோ? புரியவில்லை; நம்பவும் முடியவில்லை.

எதற்கும் இவரை ஒரு காலத்தில் ''லொக்கா'' (பெரியவர்) என்று அழைத்து வந்த இப்போதைய ஜனாதிபதி, இவரின் யோசனையைப் பரிசீலனை செய்வாரா என்பதிலேயே எல்லாம் தங்கியுள்ளது. ''தனக்குப் பொருந்தாது எனக்குப் பொருந்தும் என எப்படி இவர் கருத முடியும்?'' என இப்போதையவர் எண்ணுகிறாரோ யார் அறிவார்! எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். காலமே பதில் சொல்ல வேண்டும்.

வெலிக்கடைச்சிறையில் இருந்து

தப்பிச் சென்ற கைதிகள் இன்னமும் பிடிக்கப்படவில்லை

கொழும்பு, ஆக. 8

கடந்த வாரம் இடம்பெற்ற சிறைச்சாலை அதிகாரிகளின் வேலைநிறுத்தத்தின் போது வெலிக்கடைச்சிறையில் இருந்து தப்பிச் சென்ற கைதிகள் இன்னும் பிடிக்கப்படவில்லை.

கடமையை ஆரம்பிக்கும் முன்னர் விமானப்படை அதிகாரிகளின் சோதனைக்கு உட்பட வேண்டும் என்று விதிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து வெலிக்கடைச்சிறை அதிகாரிகள் சுமார் 200 பேர் ஒருநாள் வெளிநடப்புச் செய்தனர்.

அப்போது வெலிக்கடைச் சிறையில் 1,031 கைதிகள் இருந்தனர்.

சிறை அதிகாரிகளின் வெளிநடப்பைப்பயன்படுத்தி கைதிகள் பலர் அப்போது தப்பி விட்டனராம். (த-எ)

ஓதுக்கப்பட்ட நான்கு கோடி ரூபா நிதி

வீதிகள் புனருத்தாரண வேலைகளுக்கே

யாழ்ப்பாணம், ஆக. 8

வடபகுதி வீதிகளின் புனருத்தாரண வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டு இழுபறி நிலையில் இருந்து வந்த 4 கோடி 30 லட்சம் ரூபா அந்த வேலைகளுக்கே கிடைக்கவுள்ளது.

உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் உள்ள வீதிகளைத் திருத்தி அமைக்கவென இந்த நிதியை வழங்கி இருந்தன.

எனினும் வழங்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் நிதி பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடந்தது.

இழுபறி நிலைக்கு முற்றுப்புள்ளி

இந்த வேளை இங்கு வந்த இரண்டு வங்கிகளின் அதிகாரிகள் நிதி பயன்படுத்தப்படாமல் இருப்பது கண்டு திருப்தியற்ற நிலையை அடைந்தனர்.

வழங்கப்பட்ட நிதியை ரத்துச்செய்ய உத்தேசிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட வடமாகாண பெருந்தெருக்கள் திணைக்களம், பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி, கே. கே. எஸ் வீதி ஆகியனவற்றை செப்பனிட்டதுடன், யாழ் - கண்டி வீதித் திருத்த வேலைகளையும் ஆரம்பித்தது.

இந்த நடவடிக்கைகளை அவதானித்த மேற்படி வங்கிகள் இரண்டும் நிதி ரத்துச் செய்யும் திட்டத்தை கைவிட்டதாக அறிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது யாழ் - கண்டி வீதி, பரந்தன் - முல்லைத்தீவு வீதி, மாங்குளம்-முல்லைத்தீவு வீதி. முல்லைத்தீவு-கொக்கிளாய் வீதி, மதவாச்சி-தலைமன்னார் வீதி என்பனவற்றைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துடன் 60 லட்சம் ரூபா செலவில் புத்தூர் - மீசாலை வீதி, பண்ணை வீதி, பருத்தித்துறை - மருதங்கேணி வீதி, இராசவீதி என்பனவற்றைத் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-9-10)

உதவிப் பணம் கிடைக்கவில்லை

கோப்பாய், ஆக 8

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரண கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்கள் உதவிப்பணம் பெறுவதற்காக புதிதாக விண்ணப்பித்தும் அவர்களுக்கு உதவிப்பணம் கிடைக்கவில்லை. (க-72)

கிறிஸ்தவ மதம் பற்றி உரை

யாழ்ப்பாணம், ஆக 8

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ் ஜெபநேசன் நாளை புதன்கிழமை பி. ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஒழுங்கையிலுள்ள ஈவ்லின் இரத்தினம் பல்லியல் பண்பாட்டியல் நிறுவனத்தில் 'தென் இந்தியாவில் கிறிஸ்தவ மதம்' என்ற பொருளில் உரையாற்றுவார். (க)

சாவகச்சேரி கிளையில் வங்கியின் பொன்விழா

இலங்கை வங்கியின் பொன்விழா முதலாந் திகதி காலை சாவகச்சேரிக் கிளையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு வருகை தந்த பிரமுகர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள், வங்கியின் ஓய்வூதியர்கள் அனைவரையும் வங்கியின் முகாமையாளர் திரு. ம. வாமதேவா வரவேற்றார்.

விழா முடிவில் வருகை தந்த அனைவருக்கும் பால் பொங்கல் சிற்றுண்டி மற்றும் குளிர்பானம் வழங்கி உபசரிக்கப்பட்டது. (க)

எலியின் சேஷ்டையால் நோயாளிகள் பாதிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 8

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் உள்ள 'காட் ஸ்கான்னர் (Cat Scanear) இயந்திரத்தில் உள்ள மின்சார வயர் ஒன்றை எலி கடித்து விட்டது.

இதனால் தினமும் 50 நோயாளிகளை பரிசோதனை செய்ய வேண்டிய இயந்திரம் நான்கு பேரை மட்டுமே பரிசோதித்து வந்தது.

இயந்திரம் சரிவர இயங்காத காரணத்தை கண்டுபிடிக்க சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட கமிட்டி முன்கண்டவாறு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

எலி கடித்து பழுதாக்கிய மின்வயருக்காக புதிய வயர் ஒன்றை, ஜப்பானில் இருந்தே தருவிக்க வேண்டும் என்றும் இக்கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

இந்த ஸ்கான்னர் இயந்திரத்தின் விலை 80 லட்சம் ரூபா! (த-எ)

நல்லூர் உற்சவத்துக்கு சைவாசாரப்படி வாருங்கள்

இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக. 8

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்துக்கு வரும் பக்தர்கள் சைவாசார முறைப்படி ஆடை அணிந்து வர வேண்டும்.

இப்படி வேண்டுகோள் விடுத்துள்ளார் அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைவர் திரு. வே. க. தனபாலன்.

நல்லைக்கந்தன் ஆலய உற்சவம் தொடர்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'உற்சவகாலத்தில் சைவச் சூழலை ஏற்படுத்தும் வகையில் ஆண்களும், பெண்களும் சைவாசார முறைப்படி ஆடையணிந்து வரவேண்டும். பெண்கள் தலைவிரிகோலமாக வரக்கூடாது. நகைகள் அணிவதைத் தவிர்க்கவேண்டும். அத்துடன் தொண்டர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்' இப்படித் தெரிவித்துள்ளார் யாழ் மாவட்டத்தில் உள்ள இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களை தொண்டர் சேவைக்கு உடனடியாக வந்து சேரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-3)

நியமனங்கள்

யாழ்ப்பாணம். ஆக 8

யாழ் சுகாதார திணைக்களத்திற்கு எழுதுவினைஞர்கள் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப பதவிக்கு விண்ணப்பங்கள் கோரியபோது 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்திருந்தன. பின்னர் இவர்களில் 59 பேர் வரையானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர்.

இவர்களில் 9 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (க-9)

உள்ளூராட்சி ஆணையாளராக வாமதேவா

புதுக்குடியிருப்பு. ஆக 8

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளராகவும் பணிப்பாளராகவும் திரு. எம். வாமதேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளராக இருந்தவர்.

இவரின் நியமனத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களும் தமது கடிதத் தொடர்புகளை இனிமேல் கொழும்பிற்கு அனுப்பாது திருகோணமலையில் உள்ள இவரது பணிமனையுடன் தொடர்பு வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (க-126)

தடுப்பூசி போட்டால் தங்கப்பதக்கம்

சுகாதார அமைச்சு இவ்வாண்டு ஐப்பசி மாதமளவில் உலகளாவிய குழந்தை எதிர்ச்சக்தியை எமது நாடு எய்திவிட்டதாகப் பிரகடனப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. 1978ஆம் ஆண்டில் எமது நாட்டில் விரிவாக்கப்பட்ட எதிர்ச்சக்தியளிக்கும்திட்டம் (EPI) ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம்வெற்றியளிப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனமும் 'யுனிசெவ்' நிறுவனமும் பல ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்துவருகின்றன. அத்துடன் சர்வதேச ரொட்டரிகழகம் எமக்குத் தேவையான போலியோ தடைமருந்துகளை வழங்கி வருகிறது. 199ஆம் ஆண்டின் இறுதி வாரத்துக்கு முன்னர் சகல குழந்தைகளும வயதிற்குரிய எதிர்ச்சக்தியளிப்பைப் பெற்றிருத்தல் என்பதே இத்திட்டத்தின் முக்கியநோக்காக இருக்கிறது.

டாக்டர் சா. விஜயராசா,
பிராந்திய
தொற்றுநோயியலாளர்,
யாழ்ப்பாணம்.

குழந்தை ஒரு வயதை அடையுமுன் அவர்கள் மத்தியில் சம்பவிக்கும் ஆறு தொற்றுநோய்களாகிய குக்கல், கசம், ஏற்பு, தொண்டைக்கரப்பன், இளம்பிள்ளைவாதம், சின்னமுத்து ஆகியநோய்களுக்கெதிராக தடைமருந்து வழங்குதலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இந்நோய்களுள் சின்னமுத்து நோயே இன்றும் எமது பிரதேசத்தில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்) ஓர் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது! அண்மைக் காலங்களில் சின்னமுத்துநோயினால் இறப்புக்கள் கூடுதலாக ஏற்படுவதை வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. சின்னமுத்து நோய் ஏற்படின் குழந்தைகள் போஷாக்கின்மைக்கு ஆளாவதும் அத்துடன் அவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்படுவதும் இன்று ஓர் முக்கிய பிரச்சினையாகக் கருத முடிகின்றது. இதன்காரணமாகப் பல குழந்தைகள் மரணத்தை அடையும் நிலையும் ஏற்படுகின்றது.

சின்னமுத்துதவிர்ந்த ஏனைய நோய்களுக்கு எமது பிரதேசத்தில் 80 சதவீதம் பிள்ளைகள் தடைமருந்து பெற்றிருப்பதாகப் புள்ளிவிபரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. சின்னமுத்து தடைஊசி போடாத குழந்தைகளை நாம் ஊக்குவித்து அதற்காய தடைமருந்துகளை அண்மையில் உள்ள வைத்திய நிலையங்கள் அல்லது சிகிச்சை நிலையங்களில் போடுமாறு வேண்டுகிறேன். மக்கள் மத்தியில் இந்நிகழ்ச்சி வெற்றியளிப்பதற்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. மக்களை இந்நிகழ்ச்சியில் ஊக்குவிப்பதும் இத் தடைமருந்துகளை உரிய நேரத்தில் மக்களே நாடிப்பெறும் நிலையை ஏற்படுத்துவதுமே 'பஞ்சாயுதம் பொறித்த தங்கப்பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும்'.

1. கிராம மட்டத்திலான பஞ்சாயுதம் பொறித்த தங்கப்பரிசுப் போட்டி நிபந்தனைகள்:

அ. 1-6-88 தொடக்கம் 30 11-88 வரையிலான காலப்பகுதியில் பிறந்து சின்னமுத்து தடை ஊசி போட்டுக்கொண்ட சகலகுழந்தைகள்

ஆ. குறிப்பிட்டகாலத்தில் பிறந்து 1-8-89 தொடக்கம் 10-9-89க்கிடையில் சுகாதார நிலையங்களுக்குச் சென்று சின்னமுத்துத் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் குழந்தைகள்.

இவ்விருசாராரும்தமது பகுதி குடும்பநல சேவையாளர்கள் கிராமிய சுகாதார உதவியாளர்களுடன் தொடர்பு கொண்டு ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி அட்டைகள் நிரப்புவதன் மூலம் இப்போட்டியில் பங்குபெறத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர். 10-9-89 வரை சேகரிக்கப்பட்ட இவ்வட்டைகள் அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி (M O. H) ஊடாக 19-9-89க்கு முன்னதாக பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படும். போட்டியில் வெற்றிபெறு குழந்தைகளுக்கு பஞ்சாயுதம் பொறித்த தங்கப் பரிசுகள் வழங்கப்படும்.

2. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கான பரிசுத்திட்டம்:

மேற்பகுதியில் குறிப்பிட்ட போட்டியின் முடிவில சுகா வைத்திய அதிகாரிகளினால் யுனிசெவ் நிறுவனத்திற்கு அனுப்பப்படும் எதிர்ச்சக்தி அட்டைகளின் விகிதாசார அடிப்படையில் இவை தீர்மானிக்கப்படும். தேசிய ரீதியில் கூடுதலான விகிதாசாரம் பெறுகின்ற முதல் 10 சு. வை அதிகாரி பிரிவுகளுக்கும் ஒவ்வொரு கேடயம் பரிசளிக்கப்படும்.

இதுவே எமது இன்றைய தேவை. இதை இன்றே செய்வோம். நன்றே செய்வோம்.

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

சுந்தர நல்லை சார்வோனே!

பாடும் பணியே பணியாகப்
பாடிப் பரவிப் பணிவோமே!
ஆடும் மயில்மேல் வருவோனே
அடியார்க் கருளைத் தருவோனே!
சூடும் கடப்பம் மார்போனே!
சுந்தர நல்லை சார்வோனே!
வாடும் தமிழர் உளைவதனை
வந்து தினமும் களைவாயே!

— கவியரசு வெள்ளைப்பாமணி முருகசூரியன்

இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 3 ஆம் திருவிழா

வாசகர் திருமுகம்

2 வருடமுற்பணம்

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்ட 2 வருட சம்பள முற்பணம் உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

உரிய உள்ளூராட்சி மன்றங்களில் நிதி ஒதுக்கீடு இல்லாமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

இப்போது வடக்கு கிழக்கு மாகாண அரசின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதால் புனர்வாழ்வு புனரமைப்பு நிதியில் இருந்தாவது எமக்கு மேற்படி முற்பணத்தை வழங்குமாறு ஊழியர்கள் சார்பில் மாகாண அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர். கண்ணன்
புதுக்குடியிருப்பு.

அடையாள அட்டை இன்றி அவலம்

எமது பாடசாலை அதிபர் பணிப்புரையின் பேரில் 19 6-1988 அன்று ஓ. எல். மாணவர் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை எடுப்பதற்கான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டது.

ஒரு வார காலத்துக்குள் கிராம சேவகரை மாணவர்களாகிய நாம் அழைத்து வந்து பத்திரங்களைப் பூர்த்தியாக்குவித்தோம். பின்கிராம சேவகர் உப அதிபரிடம் பத்திரங்களை ஒப்படைத்துச் சென்றார். இதற்கு 6 மாதங்களுக்குப் பின் அதுவும் மாணவர்களின் தூண்டுதலில் பத்திரங்கள் கச்சேரியில ஒப்படைக்கப்பட்டன.

ஆனால் இதுகாலவரை (27-7 1989) அடையாள அட்டைகள் எம்மை வந்து சேரவில்லை. அவை இல்லாமல் நாம் படும் அவலத்தை யாரிடம் சொல்வோம்?

ஒரு மாணவன்
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

சமய சந்நிதிகளில்

சுவாமி ஐயப்பன் பூசை

கொழும்பு, ஆக. 8

கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தில் சுவாமி ஐயப்பன் பூசை சனிக்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது

மாலை 6 மணிமுதல் திரவ்ய அபிஷேகம், திரவ்யஹோமம், ஐயப்பன் பயனை, பதினெட்டு தத்துவங்களைக் கொண்ட 18 படிகளிலும் நெய்விளக்குகள் ஏற்றி 108 சரணக்கோவை, சாஸ்தா பஞ்சரத்தினம், 18 ஆம் படி பாடலும் பாடப்பெற்று 18 ஆம் படி பூசையும் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி 'கிரியா கலாநிதி' ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக்குருக்கள் தலைமையில் பூசையும், பஜனையும் நடைபெறுகிறது. (த)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஆக. 8

சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் இலங்கை இணையின் தலைமைக்காரியாலயம் புறக்கோட்டைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இந்த புதிய அலுவலகத்தில் பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி காரியாலயம் முன்னர் நுகேகொடையில் அமைந்திருந்தது.

இந்த இடமாற்றம் பற்றி சகல உதவியாளர்களுக்கும், சர்வதேச சென். ஜோன் அம்புலன்ஸ் இலங்கைக்கிளையின் தளபதியும் (கொமாண்டர்) ஆணையாளருமான திரு ஜி. ஏ. பியதாச அறிவித்துள்ளார் என வட மாகாண நிறைவேற்று அதிகாரி யோகத்தார் (நிர்வாகம்) திரு. எஸ். செல்வரஞ்சன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தியப்படை வாபஸானால் இலங்கைப் படைகள் சமாளிக்கும் என்கிறார் லலித்

கொழும்பு, ஆக: 8

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்பு, இலங்கை அரசோடும் மக்களோடும் சம்பந்தப்பட்ட விடயமாகும்:

இந்தியப் படைகள் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் அப்பகுதிகளின் பாதுகாப்பு நிலைமையை இலங்கைப் படைகள் சமாளிக்கும்.

இலங்கை இராணுவத்தின் பலத்தையும், திறமையையும் என்னால் குறைவாக மதிப்பிட முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் லலித்அத்துலத்முதலி.

அமைச்சர் அத்துலத்முதலி பி.பி.சியின் தெற்காசிய சேவைக்குப் பேட்டி அளித்தார்:

அப்பேட்டியில் அவர் தெரிவித்ததாவது;—

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்பு இலங்கை அரசோடும் மக்களோடும் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

இலங்கையில் பொலிஸ்மா அதிபர் தலைமையில் மாகாண மட்டத்தில் முறைப்படி பொலிஸ் படை ஒன்றை அமைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளுக்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது:

கேள்வி:- இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறதா?

அத்துலத்முதலி;- தேவையான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை அமுல் செய்யப்படவுள்ளன. நாடாளுமன்றத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் அரசு எவ்வித மாற்றமும் செய்யாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் படை ஒன்றையும் நீதிபரிபாலனத்துறையையும் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வும் சட்டமும்

அதிகாரப் பகிர்வு பற்றி புதிய யோசனைகள் தெரிவிக்கப்பட்டால் அவற்றை மாகாணசபைச் சட்டத்தில் சேர்த்துக்கொள்வது பற்றி மறுபரிசிலனை செய்யப்படும்; (அ-எ)

அன்றலர்ந்த மலர் வளையங்கள்,
கடதாசி மலர் வளையங்கள், ஓடர்களுக்கு
ரோஜாப்பூ மலர் வளையங்கள்
என்பன செய்வதில் கைதேர்ந்தவர்கள்

பிறைற் ஹவுஸ்,
(யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(3175)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சளி

மலர்வு:
12 - 10 - 1931
உதிர்வு:
24 - 07 - 1985

திதி:
08 - 08 - 1989

திரு. சி. க. பேரம்பலம்

[ஆசிரியர்]

ஆண்டு நான்கு மறைந்ததுவோ!
முழு நிலவு மறைந்ததுவோ!
மனமுருகி நிற்கின்றோம்
வேறு துணை யாரெமக்கு?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்:

''லக்சுமிவாசா''
சங்கானை:

[1447]

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(08 - 08 - 1989 செவ்வாய்)

திருமதி வாடாமலர் நடராஜா

மலர்வு:
15 — 03 — 1928
உதிர்வு:
02 — 08 — 1987

பாசத்துடன் எமை வளர்த்த தாயே - எமை(ப்)
பாராமல் நீ பிரிந்ததேனோ? - உன்
அன்பு முகம் பார்க்க நாமோடி வரு முன்னே
ஆண்டவனைத் தேடி நீ சென்ற அவசரம் ஏனம்மா?
விழிகளில் நீர் வழிய நிற்கின்றோம்! எம்
வாழ்வினில் உன் நினைவைச் சுமக்கின்றோம்!
ஆண்டுகள் இரண்டு தான் மறைந்தாலும் - உன்
நினைவுகள் என்றுமே வளருமம்மா!

இறைவனடி சேர்ந்து விட்ட எம் அன்புத்தாயின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்;

[1458]

திருமலை கரடிப்போக்குப் பகுதியில் வீடமைப்புத் திட்டம்

ரூபா 30 ஆயிரம் செலவில் 200 வீடுகள்

திருகோணமலை ஆக 8

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா கரடிப்போக்கு கிராமத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனிதவள திட்டமிடல் இளைஞர் விவகார வீடமைப்பு நிருமாண அமைச்சர் திரு: ஜோர்ஜ் செனிவரத்ன காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம் கணேசலிங்கம் ஆகியோர் இவ்வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லை நட்டனர்.

இதன் பிரகாரம் 30ஆயிரம் ரூபா செலவிலான இருநூறு வீடுகள் இக்கிராமத்தில்அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்புஆறுமுகத்தான் குடியிருப்பு கிராமத்திலும் 150 வீடுகள் அமைக்கபபடவுள்ளன.

இதேவேளை உப்புவெளி அலஸ்தோட்டம் கிராமத்தில் பட்டதாரி இளைஞர் பயிற்சி நிலையம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது. இதன் மூலம் பட்டதாரி இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கித் தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேசமயம் மனிதவள திட்டமிடல் இளைஞர் விவகார வீடமைப்பு அமைச்சின் அலுவலகம் உவர்மலை பகுதியில் அமைச்சர் திரு.ஜோர்ஜ் செனிவிரத்னவால் திறந்து வைக்கப்பட்டது, புதிய அலுவலகம் திறந்துவைக்கப்பட்டதன் மூலம் அமைச்சின் செயற்பாடுகளை திறம்படச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சர் திரு. செனிவிரத்ன தெரிவித்தார்.

ஒரு பஸ்ஸுக்கு 18 ஊழியர்; கட்டண உயர்வு அவசியமாம்

ஒரு பஸ்ஸுக்கு 18 பேர் என்ற வீதத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்

மேலதிக பஸ்களைத் தருவித்து சேவைக்கு விடாவிடின் ஊழியர்களை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று போக்குவரத்து துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி சொன்னார்.

இலங்கைப் போக்குவரத்து சபை பொருளாதார ரீதியில் லாபகரமானதாக நடத்தவும் ஊழியருக்குக் கூடுதல் வேதனம் வழங்கவும் வேண்டுமானால் பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.

—இப்படி துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி சொன்னார்: (ஒ-எ)

சேவை நலம் பாராட்டு விழா

பண்டத்தரிப்பு, ஆக. 8

'பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தின் வரலாற்றில் அன்னை யூலாவி அவர்கள் தலைவியாக இருந்து பணியாற்றிய 15 ஆண்டுகளும் பொன்னெழுத்துக்களால் பாறிக்கப்பட வேண்டிய காலம் ஆகும்.'

ஒய்வு பெற்ற அன்னை யூலாவிக்கு நிலைய மாணவிகளால் நடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் உரையாற்றிய பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் சங்கைக்குரிய சகோதரி சவோரினு இவ்வாறு கூறினார்.

திருமதி ஜெயமணி, மாணவிகள் றெஜினு, ரூபி, மலர் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

பண்டத்தரிப்பு கன்னியர் மடத் தலைவி சங்கைக்குரிய சகோதரி, செல்போன் தலைமையில் வைபவம் நடைபெற்றது. (க-120)

வழிபாடு

மனதைப் பக்குவமாக்கி உள அமைதியை ஏற்படுத்தும்

மணிவாசகர் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக 8

'வழிபாடு மனித உள்ளத்தை மாண்புறச்செய்யும். வழிபாடுமூலமே உள்ளத்தைப் பக்குவப்படுத்தி சமுதாயத்தில் அமைதியைக் காணமுடியும்.'

வட்டுக்கோட்டை கலா நிலையத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் தலைமை வகித்துப் பேசிய நிலைய முதல்வரும் முன்னாள் அதிபருமாகிய திரு. க. கயிலாயநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவில் சொற்பொழிவாற்றிய ஆசிரியை திருமதி ஞானம்பிகை முத்துலிங்கம், 'மாணிக்கவாசகருக்கு திருவாத ஆரடிகள் புராணம் என்று ஒரு தனிப்புராணம் உண்டு. இது மணிவாசகரின் மாண்புக்குச் சான்றாகும்' என்று கூறினார்:

இசைப்புலவர் திரு.வே. சிவஞானத்தின் இசை நிகழ்ச்சியும் கலாநிலைய மாணவர் குழுவினரின் வயலின் இசையும் விழாவில் இடம்பெற்றன. (க)

நீர்வேலியில் அசம்பாவிதம்

நீர்வேலிப் பகுதியில் ஞாயிறு மோதல்சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இதனை அடுத்து ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றன.

இதைத் தொடர்ந்து பருத்தித்துறைக்கான போக்குவரத்துகள் கோப்பாய் பலாலி வீதி புத்தூர் ஊடாக நடைபெற்றன. (ஒ-எ(

விழுந்து மரணம்

குருநகர், மீன்சந்தைப்படுத்தும் வாடியில் ஒருவர் திடீரென்றுவிழுந்து மரணமானார்.

வள்ளத்தில் இருந்து கரைக்கு மீனை எடுத்துவரும் தொழில் செய்யும் பொன்னுத்துரை (வயது 60) என்பவரே இறந்தவர் ஆவார்.

இ. போ. ச, வேலை நிறுத்தம்:

நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை

கொழும்பு, ஆக. 8

அண்மையில் போக்குவரத்து ஊழியரின் வேலைநிறுத்தத்தை நடத்திய ஜாதிக கம்கரு சட்டன மத்தியஸ்தான அமைப்புக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுப்பது என்று ஆராய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்தாலோசனை நடத்த உள்ளனர்.

ஜாதிக கம்கரு சட்டன் மத்தியஸ்தான அமைப்பு ஆரம்பித்த விதமே கேள்விக்குறியாக உள்ளது.

நீண்டகாலமாக இயங்கிவரும் தொழிற்சங்கங்களுக்கு உத்தர விடுமவிதத்தில் புதியதொழிற்சங்க அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இப்படி பழம்பெரும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய தொழிற்சங்க அமைப்பின் பேச்சாளர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

'எமது அமைப்பு சகல தர ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எமது அமைப்பு பாரம்பரியதொழிற் சங்கங்களில் இருந்து தோன்றியது'- என்று தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காண அரசு இப்புதிய அமைப்பின் பிரதிநிதிகளுடன்தான் பேச்சுக்களை நடத்தியது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

இடையில் அகப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 8

கரவெட்டி மாதா கோவிலடியில் கடந்தவெள்ளிக்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

நண்பகல் அளவில் நடந்த இந்த மோதலில் இடையில் அகப்பட்டு பொதுமக்களில் ஒருவர் மரணமானார்.

இறந்தவர் ஆனந்தன் என்பவர் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது (அ-9)

கருத்தரங்கு

அண்மையில் நுணுவில் அறவழிகழக அம்பாள் பாடசாலையில் நுணுவில் பொதுச் சுகாதார மருத்துவமாது திருமதி க. செல்வரத்தினம தலைமையில் சிறுவர் போஷாக்கு உணவு பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பொதுச் சுகாதார மேற்பார்வை மருத்துவமாது திருமதி வி. மகாலிங்கம் வளரும் பிள்ளைகளுக்கான அத்தியாவசிய போஷாக்குகள் பற்றிக் கருத்துரை வழங்கினார். (க-72)

விவசாயத் திணைக்களம் (வடக்கு - கிழக்கு)
விவசாயக் கல்லூரி, வவுனியா.

விவசாயத்துறை டிப்ளோமா - விண்ணப்பம்

1989 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப் படவிருக்கும் விவசாயத்துறை டிப்ளோமா பயிற்சி நெறிக்கு கீழ்க்காணும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாயம், புவியியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது நான்கு பாடங்களில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்தவராயும்;
2. 1989 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ஆம் திகதியன்று 18 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டவராயும். இருத்தல்வேண்டும்.

விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளையும் இணைத்து 1989 ஆகஸ்ட்டு 25 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்!

1. க.பொ.த. (உ.த) பரீட்சை தராதரப்பத்திரம்;
2. க.பொ.த. (சா.த) பரீட்சை தராதரப்பத்திரம்
3. இரு நற்சாட்சிப்பத்திரங்கள்
4; தேவைப்படும் வேறு ஆவணங்கள்.

விவசாயப் பணிப்பாளர்.

(வடக்கு - கிழக்கு)
காணி விவசாய அமைச்சு,
திருகோணமலை.
04-08-1989.

(இ/3189)

THE EXPRESS INSTITUTE
KOPAY
A BOON TO STUDENTS

புதிய பிரிவு
O/L Dec. 89
DAY CLASSES
(காலை 8-00- பி.ப.1-00)

ஆகஸ்ட் 09 இல் ஆரம்பம்

★ ஏனைய சகல வகுப்புகளும் பழைய நேர அட்டவணைப்படி ஆரம்பமாகியுள்ளன.

★ 09 - 08 - 1989 ஆம் திகதிக்கு முன் அனைத்து மாணவர்களும் தங்கள் பெயர்களை மீண்டும் பதிந்து கொள்ளவேண்டும். தவறுவோரின் பெயர்கள் வகுப்பிலிருந்து நீக்கப்படவுள்ளன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்:

- அதிபர்.

(1457)

விவசாயத் திணைக்களம் (வடக்கு-கிழக்கு)
விவசாயக் கல்லூரி, வவுனியா.

அதிபர், விரிவுரையாளர் பதவி

விவசாயத் துறையில் தமிழ் மொழி மூலம் இரு ஆண்டு டிப்ளோமா பயிற்சி நெறியை வவுனியாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விவசாயக் கல்லூரி நடாத்தவுள்ளது. இப் பயிற்சிநெறிக்கான குறைந்தளவிலான கல்வித் தகைமையாக — க. பொ. த. (உ. த) பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். முதலாவது பகுதியினருக்கான பயிற்சிநெறி 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்கள் கோரப்பட்ட பதவிகள்:

அதிபர் பதவி:

விண்ணப்பதாரர் குறைந்தளவு கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் மேலதிக பட்டம் பெற்ற பட்டதாரியாகவோ அன்றி விஞ்ஞானத்தில் டிப்ளோமா பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்; கல்விப் போதனையிலும் கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவத்திலும் அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரிவுரையாளர்கள் பதவி:

விண்ணப்பதாரர் குறைந்தளவு கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் விஞ்ஞான பட்டதாரியாக இருத்தல் வேண்டும். விரிவுரையாளர்கள், பயிர் உற்பத்தி, கால்நடை அபிவிருத்தி, தோட்டக்கலை, விவசாயப் பொறியியல், பயிர்ப் பாதுகாப்பு, விவசாய இரசாயனவியல், மண்ணியல், விவசாயப் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் விரிவுரையாற்றல் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

● தகைமைகளுக்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்;

விண்ணப்பதாரர்கள் தங்கள் தகைமைகளைக் குறித்து தங்களின் விண்ணப்பத்தை 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

-விவசாயப் பணிப்பாளர்

[வடக்கு, கிழக்கு]
காணி விவசாய அமைச்சு,
திருகோணமலை.
04-08-1989.

[இ-3190]

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. ஐயாத்துரை இராமநாதன்

ஜனனம்:
07 — 10 — 1905
மறைவு:
12 — 08 — 1986

திதி: 08 - 08 - 1989

எங்களைப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உமது அன்பின் திருவுருவம் எங்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாது:

உங்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்;

மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்:

[11711]

காபூல் அரசு கவிழ விடமாட்டோம்

சோவியத் அரசு மீண்டும் அறிவிப்பு!

காபூல், ஆக 7

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வனட்சே ஆப்கன் தலைநகர் காபூலுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்

ஆப்கன் நிலைமை பற்றி ஜனாதிபதி நஜிபுல்லாவுடன் அவர் பேச்சுக்கள் நடத்தினார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில்,

கெரில்லாக்களின் தாக்குதல் காரணமாக காபூல் அரசு வீழ்ச்சி அடைய சோவியத் யூனியன் அனுமதிக்காது. தேவையான அனைத்து உதவிகளையும் சோவியத் யூனியன் காபூல் அரசுக்கு வழங்கும் என்று திரு. ஷெர்வான்ட்சே சொன்னார்.

இதனிடையில் — பாகிஸ்தானில் இருந்து இயங்கும் முஜாஹிதின் கெரில்லாக்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மாற்று அரசைத் தெரிவு செய்ய பாகிஸ்தானில் உள்ள ஆப்கன் அகதிகள் மற்றும் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கனிஸ்தான் பகுதிகளிலும் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்று கெரில்லா அமைப்பு ஒன்று கோரியிருக்கிறது. (எ)

நியூசிலாந்து பிரதமர் லாங்கே பதவி விலகுவதாக அறிவிப்பு!

வெலிங்டன், ஆக. 7

நியூஸிலாந்து பிரதமர் டேவிட் லாங்கே தனது பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக அறிவித்து இருக்கிறார்.

அமைச்சரவை சகாக்களின் ஒத்துழைப்பு கிடைக்காததால் தான் பதவி விலகுவதாகத் திரு. லாங்கே காரணம் கூறியிருக்கிறார்.

1979 இல் தொழிற் கட்சியின் தலைவராகப் பதவியேற்ற திரு. லாங்கே 1984 இல் 30 ஆண்டுகள் பதவியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சியைத் தோற்கடித்து பிரதமரானார்

அதைத் தொடர்ந்து நியூஸிலந்து அரசியலில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

அமெரிக்கா — நியூஸிலந்து ராஜதந்திர உறவில் நெருக்கடி ஏற்பட்டது;

அமெரிக்காவின் அணு ஆயுதங்களுடனான கப்பல்கள் நியூஸிலந்து துறைமுகங்களுக்குள் பிரவேசிக்க திரு. லாங்கே தடைவிதித்ததே இந்த நெருக்கடிக்குக் காரணமாகும்.

தொழிற் கட்சியின் பொருளாதாரக் கொள்கையும் திரு. லாங்கேயின் ராஜினாமாவுக்குக்காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஐ.நா.குழு கம்போடியா சென்றது

பாங்கொக், ஆக. 7

வியட்னம் துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படுவது பற்றிய உண்மை நிலையை நேரில் கண்டறிய ஐநா குழு ஒன்று இன்று கம்போடியாவுக்குச் சென்றது.

7 நாடுகளைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உள்ளனர். அவர்களில் சிலர் இராணுவ அதிகாரிகள் ஆவர்.

வருகிற 20 ஆம் திகதி பாரிசில் நடைபெறவுள்ள சர்வதேச அமைதி மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக ஐ. நா குழு அறிக்கை ஒன்றை இந்த விஜயம் தொடர்பாக சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

80 தடவை ரத்ததானம் செய்த 45வயது 'அருண்' உடல் வலுவை நிரூபிக்க மருதமலை ஏறினார்

சென்னை' ஆக. 7

80ஆவது தடவை இரத்ததானம் செய்த 45 வயதான ஒருவர் ஆயிரம் படிகளை ஏறி மருதமலை முருகன் ஆலயத்தை அடைந்து தனது உடல் வலுவை நிரூபித்தார்.

தமிழ் நாட்டில் இச்சம்பவம் நடைபெற்றது.

விவரம் வருமாறு:

அருண்கோகுல்தாஸ், தமிழ் நாட்டைச் சேர்ந்த வர்த்தகர்.

18 வயதில் இரத்ததானம் கொடுக்கத் தொடங்கியஇவர் 12 வாரங்களுக்கு ஒருமுறை இரத்ததானம் செய்துவந்ததாக இவர் கூறுகிறார்.

கடந்த 27 வருடங்களில் 80 தடவைகளாக 13 லீற்றர் இரத்தத்தை இவர் தானம் செய்திருக்கிறார்.

'உயிர்களைக் காப்பாற்றவே இரத்தம் கொடுத்து வருகின்றேன். இதற்குப் பணம் மட்டும் கொடுத்தால் போதாது: இரத்ததானம்செய்யும் உணர்வையும் ஊட்டவேண்டும்''- என்று கூறும் இவர். இரத்த தானம் செய்வதால் உடல் வலுவிழந்துவிடும் என்று கூறுவது தவறு என்று காட்டவே நான் ஆயிரம் படிகளை ஏறி மருதமலை உச்சியை அடைந்தேன்' என்றும் கூறுகிறார்.

80 தடவைகள் இரத்ததானம் வழங்கியதைக் கௌரவித்து இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியும் இவருக்குத் தங்கமுலாமிடப்பட்ட பதக்கம் ஒன்றையும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன.

இரத்ததான உணர்வை வளர்க்க மருதமலை முருகன் யாத்திரை மேற்கொண்ட இவர், இரத்ததானம் செய்யும் தீவிர உறுப்பினர்கள் கொண்ட சங்கம் ஒன்றை அமைப்பதில் முன்னின்றுபாடுபட்டிருக்கிறார். (எ-த)

மந்தியை மயில் என்பது காலத்தின் கட்டாயமா? அ.தி.மு.க வீரப்பனுக்கு தி.மு.க எம்.எல்.ஏ கேள்வி

திருச்சி, ஆக 7

கோட்டானைக் குயில் என்பது காலத்தின் கட்டாயமா?

இப்படி அ. தி. மு. க. இணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான இராம. வீரப்பனை தி.மு.க. எம். எல். ஏ. ரகுமான்கான் முன்கண்டவாறு காட்டமாகக் கேட்டார்.

திருச்சி திருவெறும்பூர் அண்ணா சீரணி அரங்கில் தி.மு.க. கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

ஜெயலலிதாவுக்கு கேள்வி

எம். ஜி. ஆர். காலத்திலேயே ஜெயலலிதா சட்டசபைக்குவருவார் என்று நான் ஆவலோடு எதிர்பார்த்தேன். ஆனால் அது இப்போது நடக்கவில்லை.

இப்போது எதிர்க்கட்சி தலைவியாக சட்டசபைக்கு வந்தார். ஓரிருநாள் வந்தவர் இபபோது வருவதில்லை.

ஒரு எதிர்க்கட்சி தலைவராக இருப்பவர் சட்டசபைக்கு வந்து தனது கடமையை செய்ய வேண்டாமா? இதில் அவருக்கு என்ன சிக்கல் இருக்கிறது.

கேட்டால் துரை முருகன் சேலையை பிடித்து இழுப்பார்-என் மானம் போய் விடும் என்கிறார்;

பாஞ்சாலியா?

ஒரு காலத்தில் ஜெயலலிதாவை சூர்ப்பனகை ஆணவக்காரி என்றெல்லாம் பேசிய காளிமுத்து. இப்போது பாஞ்சாலியின் கண்ணீர் துரியோதனை அழிப்பது போல ஜெயலலிதா கண்ணீர் இந்த அரசை அழிக்கும் என்கிறார்,

அப்படியானால் ஜெயலலிதா என்ன பாஞ்சாலியா? பாஞ்சாலியின் நிலை என்ன என்பது உங்களுக்கு தெரியும் ஜெயலலிதாவும் அப்படித்தான் என்று சொல்லுகிறாரா? காளிமுத்து.

காலத்தின் கட்டாயமா?

இப்போது புதிதாக வீரப்பனும் இணைந்து விட்டார். எம். ஜி. ஆர் இறந்ததும் உடன் கட்டை ஏறுவேன் என்ற ஜெயலலிதாவைப் பார்த்து அப்படியானால் நீ எத்தனை பேருக்கு உடன் கட்டை ஏறுவாய் என்று கேட்ட வீரப்பன் இப்போது எல்லாமே என் தங்கச்சி என்கிறார்.

இது காலத்தின் கட்டாயம் என்கிறார்.

எது காலத்தின் கட்டாயம்? மந்தியைப் பார்த்து மயில் என்பது காலத்தின் கட்டாயமா? கோட்டானை குயில் என்பது காலத்தின் கட்டாயமா? அதை வீரப்பன்தான் விளக்க வேண்டும்.

அரசியல் அனாதை ஆகிவிடக்கூடாதே என்பதற்காக வீரப்பன் இப்படி பிழைப்பு நடத்தி வருகிறார். (எ-4)

ராஜீவின் புரோகிதர் தேர்தலில்

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ராமேஸ்வரம் தொகுதியில் போட்டியிட பிரதமர் ராஜீவ் காந்தியின் குடும்ப புரோகிதர் மனு சமர்ப்பித்திருக்கிறார்.

அவரது பெயர் ஜி. ரவீந்திர பண்டா.

வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காகச் சென்ற காங்கிரஸ் ஆய்வுக்குழுவிடம் மனுவைக் கொடுத்தார்.

திரு ரவீந்திர பண்டாவுக்கு ஆதரவாக பல இந்திரா காங்கிரஸ் தொண்டர்களும் சென்றிருந்தனர். (எ)

தேசிய முன்னணியில் அ.தி.மு.க. இல்லை என ஹெக்டே தகவல்

பாண்டிச்சேரி, ஆக 7

போபர்ஸ் பேர ஊழல்வெளிவந்ததும் ராஜீவ்காந்தி பதவி விலகி இருக்க வேண்டும். அப்படிச் செய்யாததன் மூலம் இந்தியாவின் கௌரவத்தை அவர் கெடுத்துவிட்டார்.

ஜனதா தள் தலைவர்களில் ஒருவரான திரு. ராமகிருஷ்ண ஹெக்டே செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. வை தேசிய முன்னணியில் சேர்க்க முடியாது.

நடந்து முடிந்த ராஜ்ய சபை தேர்தலில் காங்கரஸுக்கு எம். பி. பதவியை அ. தி. மு. க. விட்டுக்கொடுத்தது.

3 இல் 2 பங்குக்காக காங்கிரஸ் ராஜ்ய சபையில் போராடுகின்ற இச் சமயத்தில் இப்படி நடந்து கொண்ட அ. தி. மு. க. வை தேசிய முன்னணியில் சேர்ப்பதா? முடியாது. (எ)

பணயக் கைதி விவகாரத்தில் இன்னும் தொடரும்இழுபறி

பேரூட், ஆக 7

பணயக் கைதிகள் விவகாரத்தில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் விதித்திருந்த நிபந்தனையை இஸ்ரவேல் அரசு நிராகரித்து விட்டது

இஸ்ரவேல் கமாண்டோக்களால் கடத்தப்பட்ட ஷேக் கரீம் என்பவருடன் 450 அரபுக் கைதிகளையும் விடுவித்தால் மட்டுமே அமெரிக்க பணயக் கைதி சிசிப்பி என்பவர் விடுவிக்கப்படுவார் என்று ஹிஸ்புல்லா குழு நிபந்தனை விதித்து இருந்தது.

இந்த நிபந்தனைகளை இஸ்ரவேல் அரசு நிராகரித்தது. பணயக் கைதி விடுதலை விவகாரத்தில் இது மேலும் தாமதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

மாலைதீவு சதிமுயற்சி வழக்கில் தீர்ப்பு

6 இலங்கையருக்கு மரண தண்டனை

மாலே ஆக 7

மாலைதீவுச் சதி முயற்சி வழக்கில் ஆறு இலங்கைத் தமிழருக்கு விதிக்கப் பட்ட மரணதண்டனை நிறைவேற்றப்படும் சாத்தியமில்லை என்று பிபிசி அறிவித்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மாலைதீவு அரசைக் கவிழ்க்கும் இச்சதி முயற்சி இடம் பெற்றது.

இந்திய ராணுவம் விரைந்து சென்று இதனை முறியடித்தது தெரிந்ததே.

கடந்த சில மாதங்களாக நடந்து வந்த சதி முயற்சி வழக்கு விசாரணை முடிந்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆறு இலங்கைத் தமிழருக்கு மரணதண்டனையும் 8 இலங்கைத் தமிழருக்குத் சனசஞ்சாரமற்ற தீவில் 17 ஆண்டுகள் வாழவேண்டும் என்ற தண்டனையும் நீதிமன்றம் விதித்தது.

இன்னும் 50 பேருக்கு அடுத்த வாரம் தண்டனை வழங்கப்படவுள்ளது. இவர்களில் சிலர் மாலை தீவு வாசிகள் ஆவர்

1951க்கு பின்னர் மாலைதீவு அரசு மரணதண்டனை எதையும் நிறைவேற்றவில்லை: அதனால் இந்த 6 இலங்கைத் தமிழர் மீது விதிக்கப்பட்ட மரணதண்டனையும் நிறைவேற்றப்படமாட்டாது என்று பிபிசி தெரிவித்தது (எ)

ஹொங்கொங்கின் எதிர்காலம் பற்றி லண்டனில் பேச்சு!

லண்டன், ஆக. 7

ஹொங்கொங் தீவின் வருங்காலம்பற்றி பேச்சு நடத்த அதன் கவர்னர் லண்டன் சென்றார்

1999இல் தற்சமயம் பிரிட்டனின் பொறுப்பில்உள்ள இத்தீவின் நிர்வாகம் சீனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அண்மையில் சீனவில் இடம் பெற்ற கலவரம் காரணமாக சீனநிர்வாகத்தின்கீழ் தங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது குறித்துஹொங்கொங் மக்கள் அச்சமடைந்துள்ளனர். (எ)

வி, பி. சிங் அழைப்பு!

புதுடில்லி, ஆக. 7

பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படி ஜனதா தள் தலைவர் வி பி. சிங் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி எம்பிக்களுக்கு அழைப்பு விடுத்தார். (எ)

மீண்டும் தி. மு. க. வில்

சென்னை ஆக 7

முன்னாள் அ. தி. மு. க அமைச்சர் சத்திய வாணி முத்துவும் ராஜ்ய சபையின் அ. தி. மு. க. எம்பியாக இருந்த ஆலடி அருணாவும் நேற்று தி. மு. க. வில சேர்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ - த)

அணுகுண்டு தினம்

டோக்கியோ ஆக 7

44 ஆண்டுகளுக்கு முன்னர் அணுகுண்டு போடப்பட்ட தினத்தை ஜப்பானில் ஹிரோஷிமா நகர மக்கள் நேற்று அனுஷ்டித்தனர்.

1945 ஆம் ஆண்டு அமெரிக்கா போட்ட அணுகுண்டு வெடித்ததினால் ஹிரோஷிமாவில் மட்டும் ஒரு லட்சத்து 44 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது (அ - எ)

4 பேர் பலி

இஸ்லாமபாத் ஆக, 7

பெஷாவாரில் சந்தைக் கட்டடம் அருகில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 4 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்: (எ)

தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷிப்ருவை நாடுங்கள்:

ஷிப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!

Protinex®
CHOCOLATE-FLAVOURED DRINK
PROTEIN • VITAMINS • MINERALS

Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

★ அலுமாரி, சோக்கேஸ், கட்டில், தொட்டில், கதிரை வகைகள்!

★ றேஷிங் பைசிக்கிள், கொண்டா, C 50 மோட்டார் சைக்கிள், பான் அயன் பொக்ஸ், பிளண்டர் என்பவற்றை மிகமலிவாகப் பெறுவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

பிறைற் ஒக்ஷன் சென்ரர்

112, 19, 2 - ஆம் குறுக்கு வீதி.
யாழ்ப்பாணம்.

உதயன்

08 • 08 - 1989 செவ்வாய்க்கிழமை

★ பழைய-புதிய வீட்டுத் தளபாடங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்,

★ வீட்டுப் பாவனைப் பொருட்களை கருந்த விலைக்கு விற்பனை செய்வதற்கும்
எம்மை நாடுங்கள்:

பிறைற் ஒக்ஷன் சென்ரர்

112. 19, 2- ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

சைக்கிள் குண்டு வெடித்து 4 பொலிஸார் மரணம்!

சைக்கிள் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததால் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர் வேறு 6 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் மித்தெனியாவில் ஞாயிறு பிற்பகல் இடம்பெற்றது.

ஞாயிறு பிற்பகல் தங்காலையில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாத்தறை, கிரிமட்டிமுல்ல என்னுமிடத்தில் கடந்தவெள்ளிக் நடந்த 'தொவில்' வைபவத்தின்போது ஆயுதந் தரித்தோர் பிரவேசித்து ஒருவரை சுட்டுக் கொன்றனர். பின்னர் அந்த நபரைக் கத்திகளாலும் வெட்டினர். (ஒ எ)

இதுவரை ரூ.2கோடி நிவாரணம்; காங்கேசன் வங்கியில் மட்டும்!

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளை ஊடாக மட்டும் இதுவரை 2 கோடி 20 லட்சம் ரூபா மீளக்குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை இலங்கை வங்கியில் நிவாரணக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாக வங்கி முகாமையாளர் திரு. நா. விவேகானந்தன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 25 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கே இந்த நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-10]

மாலைதீவு அரசை எச்சரித்து 'புளொட்' இயக்கம் அறிக்கை

வவுனியா, ஆக. 8

'மாலைதீவு அரசு இவ்வருட இறுதிக்குள் எமது அனைத்துத் தோழர்களையும் விடுதலை செய்ய வேண்டும். அதன் மூலம் தலைமறைவு இயக்கமான எம்முடன் பகைமை இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்த மாலைதீவு அரசு வழி வகுக்கும்'

—இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இராணுவப் பிரிவின் சார்பாக வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் திரு. எம்: மாணிக்கதாசன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 7ஆம் திகதியிடப்பட்ட அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ்வருட இறுதிக்குள் எமது அனைத்துத் தோழர்களையும் விடுதலை செய்யாமல் — எம்மைச் சினம் கொள்ள வைக்கும் வகையில் மாலைதீவு அரசு ஈடுபடுமானால் —

அது, மாலைதீவு அரசையும், அதன் மக்களையும் எமது தொடர்ச்சியான இராணுவச் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளும்.

பல விரும்பத்தகாத சம்பவங்கள் (உயிர்ச் சேதங்கள், பொருட் சேதங்கள் ஏற்பட முன்னர், மாலைதீவு அரசு புரிந்துணர்வின் அடிப்படையிலும், தந்திர உபாயமுறையிலும் செயற்படும் என்ற பலரின் கருத்துக்களையும் நாம் அவதானித்து வருகிறோம்.

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-164)

உலகவங்கி, நாணய நிதியம்; 21 இல் கொழும்பில் பேச்சு

கொழும்பு, ஆக. 8

உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் தூதுக்குழுக்கள் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை இலங்கை அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளன.

இக்குழுக்களிடம் சமர்ப்பிப்பதற்காக புதிய கொள்கைத் திட்டம் ஒன்றை இலங்கை அரசு தயாரித்து வருகிறது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் வருகிற அக்டோபர் 17 ஆம் திகதி பாரிஸில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டம் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றிருக்கவேண்டும்.

இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில் அது அக்டோபருக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அக்டோபருக்கு முன்னர் இலங்கையின் கடனுதவி பெறும் கொள்கைத் திட்டத்தை உலகவங்கியும் சர்வதேச நாணயச் சபையும் அங்கீகரிக்க வேண்டும்.

இலங்கைக்கு உதவிசெய்யும் நாடுகளின் இறுதி முடிவு உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயசபை ஆகியவற்றின் சிபார்சிலேதான் தங்கியுள்ளது.

அரசு தயாரித்து வரும் கொள்கைத் திட்டத்தில் கொழும்பில் உள்ள அமைச்சுக்களின் செயற்பாடுகள் குறைக்கப்படும் என்றும் பெரும்பாலான ஊழியர்கள மாகாணசபைக்கு மாற்றப்பட்டு விடுவர் என்று தெரிகிறது

மத்திய அமைச்சுக்களின் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் என்றும் தெரிகிறது.

விரயத்தைக் குறைக்கும் வகையில் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றி அமைப்பதிலும் அரசு கவனம்செலுத்தி வருகிறது. (உ-ா)

கணக்கியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக 8

ஜீ. சி. ஈ. (உயர்தர) வகுப்புகளுக்குரிய கணக்கியல் பாடக் கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடைபெறும். வர்த்தகக் கல்வி அதிகாரி திரு. சி. சிவராஜா இதனைத் தெரிவித்தார்.

காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4 30 மணைவரை கருத்தரங்கு நடைபெறுமெனவும் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கணக்கியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

இந்திய யோசனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக் கூட்டத்தில் சகலரின் கருத்துக்களும் பரிசிலனைக்கு எடுக்கப்பட்டு ஆராயப்பட்டு ஜனாதிபதி இறுதி முடிவை மேற்கொள்வார் என அறிய வருகிறது.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் இந்திய யோசனைகளை நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின சமர்ப்பிப்பதுடன் அறிக்கை ஒன்றையும் வெளியிடுவார் — என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ- எ- 21)

மட்டக்களப்பில் பாடசாலைகள் திறக்கப்பட்டன

மட்டக்களப்பு, ஆக. 8

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பணிப்புரையைத் தொடர்ந்து மட்டக்களப்பில் நேற்றுப் பாடசாலைகள் திறக்கப்பட்டன.

எனினும் மாணவர்கள் சமூகம் கொடுக்கவில்லை: ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைகளுக்கு வந்திருந்துவிட்டுச் சென்றனர். (அ-21)

வவுனியாவில் பாடசாலைகள் 9-ம் திகதி திறப்பு

வவுனியா, ஆக. 8

வவுனியா மாவட்டப் பாடசாலைகளை இம்மாதம் 9ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் முன்றுந் தவணைக்காக திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் மறு அறிவித்தல்வரை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-164)

செய்திச் சாரம்

கிளிநொச்சியில் மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 8

கிளிநொச்சி 7ஆம் வாய்க்கால் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாக அறிய வருகின்றது

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. (ஓ 76)

நெல்லியடியில்

கரவெட்டி ஆகஸ்ட் 8

நெல்லியடியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை3 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது:

இச்சம்பவத்தை அடுத்து ஷெல் வீச்சும், துப்பாக்கிப்பிரயோகமும் இடம் பெற்றன. இதனால்இப்பகுதியில் பதற்றம் நிலவியது. (ஓ-70)

'பேரன் கவிதைகள்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஆக 8

நெல்லை க. பேரன் எழுதிய 'பேரன் கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்டில் நடைபெறும்.

அஞ்சல் திணைக்கள பிரதேச கணக்காளர் திரு. சு. சிவபாலன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

புலவர் மா. பார்வதி நாதசிவம், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி, திருமதி. பத்மா சோமகாந்தன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள். (ஒ)

தற்போதைய நிலையை ஆராய்ந்தனர்

திருகோணமலை, ஆக. 8

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் கூடி தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

இதேவேளையில் வடக்கு - கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள், எதிர்பார்க்கப் பட்டதுபோல திருகோணமலை திரும்பவில்லை. (ஓ-21)

நேற்று மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டம்

முஸ்லிம் காங்கிரஸ் பகிஷ்கரிப்பு

திருகோணமலை, ஆகஸ்ட் 8

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் திரு. பெ. கிருபாகரன் நேற்றுச் சமர்ப்பித்தார்: சபை முதல்வர் திரு பொன்: ராஜகாரியர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

5 கோடியே 80 லட்சம் ரூபா துண்டு விழும் தொகையைக் கொண்டு உள்ள இந்த வரவு செலவுத் திட்டத்தில் 13 கோடியே 64 லட்சம் ரூபா வருமானமாகக் காட்டப்பட்டது

எதிர்க்கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் திருமலையில் தங்கியிருந்த போதிலும் வரவு - செலவுத் திட்டக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் கூடிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியற்குழு, மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மாகாண சபையைப் பகிஷ்கரிப்பது என முடிவு செய்தது.

முஸ்லிம் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர்களில் ஒருவரான ஜனாப். ரி ஏ. உதுமான் லெப்பை அக்கரைப்பற்றில் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-21)

அவசியம் ஏற்பட்டாலே தவிர

இந்தியத் துருப்புக்கள் ஒரு நிமிடம்கூட இருக்காது

பிரதமர் ராஜீவ் கூறுகிறார்

இந்தியத் துருப்புக்கள் அவசியம் இல்லாவிட்டால் ஒரு நிமிடம் கூட இலங்கையில் தங்கியிருப்பதை இந்திய அரசு விரும்பவில்லை;

—இவ்வாறு கூறினார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி

அணிசேரா இயக்கத்தின் சர்வதேச மாநாட்டில் பங்குபற்றும் இந்தியப் பிரதிநிதிகள் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியத் துருப்புக்கள் வெளியேறிய பின்னர் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் திருப்தி தெரிவிக்க வேண்டும்: அதுவே இப்போது முக்கியமானது.

புதுடில்லிப் பேச்சுக்களில் இதுபற்றி நன்கு ஆராயப்பட்டது இப்பேச்சுக்களின் போது இருதரப்புப் பிரச்சினைகளையும் நாம் பரஸ்பரம் ஆராய்ந்தோம் பிரச்சினை எங்களுக்கு மட்டும் அல்ல இலங்கைக்கும் இருக்கிறது.

ஆகவே காணப்படவேண்டிய தீர்வு இருதரப்புப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாக இருக்க வேண்டும்:

அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் இலங்கை அரசு மாகாண அரசு ஆகிய இரண்டு தரப்பினருக்குமே பிரச்சினை இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம்.

இந்தியப்படை இலங்கைக்கு சென்றதன் மூலம் அந் நாடு பிளவுபடும் சூழ்நிலையைத் தவிர்த்தது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது —என்றார். (உ-எ)

மேலும் 600 துருப்புக்கள் இந்தியா திரும்புகின்றன

இன்று மேலும் 600 அமைதிப்படையினர் தாயகம் திரும்புகின்றனர்.

திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து இவர்கள் கப்பல் மூலம் சென்னை திரும்புகின்றனர்:

கடந்த 28ஆம் திகதி கொழும்பிலும் புதுடில்லியிலும் ஏக காலத்தில் இரண்டு அரசுகளும் விடுத்த கூட்டறிக்கையைத் தொடர்ந்து முதலில் 600 ஜவான்களை இந்தியா திரும்ப அழைத்துக்கொண்டது.

அதன் பின்னர் கடந்த ஞாயிறு 900 இந்திய மத்திய ரிசர்வ் பொலிஸார் காங்கேசன்துறையிலிருந்து சென்னை திரும்பினர். (உ-எ)

ஈழத் தமிழர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானம் ஆகிய நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

மதுரை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் மேல் விசாரணைக்காக சென்னை கொண்டுசெல்லப்பட்டிருந்தனர்: விசாரணை முடிந்து மீண்டும் இவர்களைப் பொலிஸார் சனிக்கிழமை இரவு மதுரைக்கு பாண்டியன் எக்ஸ்பிரஸில் கூட்டிச்சென்றனர். நால்வரின் கைகளிலும் விலங்குகள் போடப்பட்டிருந்தன.

மதுரை — திருச்சிமலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தின் பின்னர் மருதையூர் பாலம் ஊடாக ரயில்கள் மெதுவாகவே செல்வது வழக்கம்.

ஞாயிறு அதிகாலை 1-30 மணியளவில் பாண்டியன் எக்ஸ்பிரஸும் மெதுவாக பாலம் மீதாகச் சென்று கொண்டிருந்தது:

பாதுகாப்பாகச் சென்ற பொலிஸாரிடம் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறிவிட்டு கழிப்பறைக்குச் சென்ற நால்வரும், யன்னல் ஊடாகப் பாய்ந்து தப்பிச் சென்றனர்:

சந்தேக நபர்களைக் கைது செய்யும்படி சகல பொலிஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். (உ-எ)

கொழும்பு ரயில்-..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் தெரிவித்தன:

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து சீமெந்தை தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாகவே இந்த ரயில்சேவையை காங்கேசன்துறை வரை விஸ்தரிக்க அரசு முயற்சித்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்-காங்கேசன் ரயில் பாதையை திருத்தும் வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேலைகளை மேற்கொள்வதற்காக புனர்வாழ்வு அமைச்சு இரண்டரைக் கோடி ரூபா நிதி ஒதுக்கியிருக்கின்றது தெரிந்ததே:

நேற்று முன்தினம் சிலீப்பர் கட்டைகளை ஏற்றிவந்த சரக்கு ரயில் ஒன்று இணுவில் வரை பரீட்சார்த்தமாக சேவையில் ஈடுபட்டது,

இதேவேளை நாளை புதன்கிழமை சிலீப்பர் கட்டைகளை ஏற்றிக்கொண்டு மேலும் ஒரு சரக்கு ரயில் இங்கு வர உள்ளது. (உ-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08 - 08 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை சின்னப்பு

(வடமராட்சி கிழக்கு உடுத்துறை தந்தை சிவம்)

வேலுப்பிள்ளை சின்னப்பு சென்ற 4-8-89 அன்று காலமானார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 5-4-89 நடைபெற்றது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும் ஈமைக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

தகவல்,
T, முத்துராசாவும்
சுற்றத்தாரும்

உடுத்துறை:
தாளையடி

(1464)

எட்வின் றெஜினேல்ட் கிறிஸ்ரோபர்

(உடுவில்)

ஒய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தரும், ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தருமான எட்வின் றெஜினேல்ட் கிறிஸ்ரோபர் காலமாகி விட்டார்.

இவர் சுகுணவதியின் (இணுவில் வைத்தியசாலை) அருமைக் கணவரும், றெஜினா சத்தியமூர்த்தி (ஜேர்மனி), ஜோன் எபி (ஜேர்மனி), ஜெயக்குமாரி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும். K V.கிறிஸ்ரோபரின் (இந்தியா) அருமைப் புதல்வனும், திருமதி சரஸ்வதியின் (புன்னாலைக்கட்டுவன்) மருமகனும் ரோசலீன் (லண்டன்), ஜோசபீன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிரஞ்சனின் (ஜேர்மனி) பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு உடுவிலில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, மக்கள்

மானிப்பாய் வீதி.
உடுவில்.

(11775)

திரு. தம்பிராஜா நடராஜா

[பிரதம லிகிதர்]

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு: தம்பிராஜா நடராஜா 05-08-1989 இல் தலவாக்கலையில் (லோசி தோட்டத்தில்) காலமானார்.

இவர் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவேந்திராணி, துஷ்யந்தினி (உதவி இளைஞர் சேவை அதிகாரி, யாழ்ப்பாணம்), பிரபாகரன் (லெபனன்), சிறிகரன் (குவைத்), கிருபாகரன் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர மாணவன்), பவானி (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆண்டு 10 மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 08-08-89 இன்று செவ்வாய்க்கிழமை கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பவானி இல்லம்'
கோப்பாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(1459)

திருமதி எம்மா றேசலிண்ட் குணசேகரம்

காலஞ்சென்ற அல்பிரட் யேசுதாசனின் மனைவியும், அற்புதராஜா (ஆசிரியர், J. C. C), சாவித்திரி, தவம் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், லலிதா, எதிர் (Saudi), பத்மினி (U K.) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சினி, கிறசாந், ரோணி, கிசோர், ஜீவா, கிறிஸ்ரீன், கிறிஸ்ரி ஆகியோரின் அன்புப் பாட்டியுமான திருமதி றேசலிண்ட் காலமானார்:

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 9-8-89 புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல: 62, கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, மணியன் தோட்டத்திலுள்ள C.P.M. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :
J. J. Atputharajah

62, நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(11781)

ஜனாஸா அறிவித்தல்

M. M. அப்துல் ஜப்பார்

M. M. அப்துல் காதர் அன்ட் பிறதர்ஸ் பங்காளர் M. M. அப்துல் ஜப்பார் 7-8-89இல் காலமானார். இவர் பர்ஹானா காமிலாவின் அன்புக் கணவரும், ஜமால்த்தீனின் அன்புத் தந்தையும், M. M. அப்துல் காதர், M. M. தாஹிர், M. M. ஜெமீல் - மர்ஹூமா சுல்த்தான் மொஹிதீன் நாச்சியா, செய்னம்பு, பல்க்கீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரது ஜனாஸா 7-8-89 திங்கட்கிழமையன்று சின்னப்பள்ளி வாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் :
A. J. M. ஜமால்த்தீன்
மகன்

(11712)